# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி

2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள் திங்கள்கிழமை

**அ.வ.எண்.295/2018**

1. செல்வி, க/பெ.சந்திரசேகர், வயது சுமார் 45, வசிப்பிடம் 1/128, தேவனாம்பாளையம்,கோயம்புத்தூர் தெற்கு, கோயம்பத்தூர்.

2. முத்துகுமார், த/பெ.சந்திரசேகர், வயது 25, வசிப்பிடம் 1/128, தேவனாம்பாளையம், கோயம்புத்தூர் தெற்கு, கோயம்புத்தூர்.

... வாதிகள்

/ எதிர் /

1. தமிழ்நாடு அரசுக்காக, அதன் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், கோயம்புத்தூர்.

2. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிணத்துக்கடவு.

... பிரதிவாதிகள்

வாதிகள் இறந்துபோன சந்திரசேகரனின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என விளம்புகை செய்து உத்தரவிட வேண்டுமாயும், தாவா செலவு தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 03.09.2018

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 08.06.2018, 04.07.2018 மற்றும் 10.08.2018 ஆகிய தேதிகளில் கிணத்துக்கடவு தாலூக்காவில் ஆரம்பம்.

தாவா மதிப்பு ரூ.5,000/- மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.150/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(டி)ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

## தாவா மதிப்பு விவரம்

தாவா விளம்புகை பரிகாரத்திற்கு மதிப்பு ரூ.5,000/-

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 25(டி)ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | | ரூ.150/- |
| | -------------------- | --------------- |
| மொத்த தாவா மதிப்பு மற்றும் நீதிமன்றக்கட்டணம் | ரூ.5,000/- | ரூ.150/- |
| | -------------------- | -------------- |

இந்த வழக்கானது என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.அழகர் சரவணன் அவர்கள் ஆஜராகியும், வாதிகள் அழைத்தும் ஆஜரின்மையினாலும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் தீர்ப்பாணை :-

1. வாதிகளின் வருகையின்மை காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

2021ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/- (P.சுபாஷினி)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------
**DECREE**
O.S.No.295/2018
District Munsif Court
Pollachi
Date : 15.02.2021
-------------------------------